**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : DVC 16/2025**

**Prosecution witness : எ.சா.1** **Date : 08.04.2026.**

| Name : மெய்யழகன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) மனுதாரர் என் மனைவி என்றால் ஆமாம். 2ம் மனுதாரர் அகிலேஷ் என் மகன் என்றால் ஆமாம். என் மனைவி தனக்காகவும் தனது மகனுக்காகவும் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் விவாகரத்து வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். ஜீவனாம்சம் கேட்டும் தாக்கல் செய்துள்ளார். திருமணம் நடந்து எனக்கு 8 வருடமாகிறது. திருமணத்தின் போது என் மனைவிக்கு பெற்றோர் வீட்டார் திருமணத்தின் போது என்னென்ன பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் 1/2 பவுன் தோடு, 1 பவுன் செயின், பீரோ, கட்டில், மெத்தை, வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்தனர்.

2) எனக்கும் என் மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டு எவ்வளவு நாட்களாக பிரிந்துள்ளோம் என்றால் 7 வருட காலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நான் என் மனைவியுடன் சேர்ந்து வாழ என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் என் மனைவி போன் செய்து சண்டையிடுவார், என்னுடன் வாழ வரமாட்டார். 5 முறை இவ்வாறு நடந்தது. யார் யார் சென்று கேட்டோம் என்றால் என் பெற்றோர்கள் மற்றும் என் தாய் மாமா ராஜா, பாலன் ஆகியோர் சென்று சேர்ந்து வாழ பேசினோம்.

3) எந்தெந்த ஆண்டு சென்று சேர்ந்து வாழ கேட்டேன் என்றால் 2021 மற்றும் 2021ம் வருடம் 6 மாதம் கழித்து, 2022, 2023 அதன் பிறகு செல்லவில்லை. பஞ்சாயத்து பேசியது சம்மந்தமாக என் பெற்றோர்கள், பாலன், ராஜா அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் விசாரிக்க

தேவையில்லை. நீதிமன்றம் மூலமாக சட்டப்பூர்வமாக சேர்ந்து வாழ நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றால் ஆமாம். பிடிக்காத மனைவியுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாத நிலையில் என்ன காரணத்திற்காக விவாகரத்து தரவில்லை என்றால் தற்போது நேரம் சரியில்லை என்பதால் அமைதியாக உள்ளேன்.

4) நான் சொல்வது தவறு என்றும் என் மனைவி பிரிந்த பின்னிட்டு நான் பஞ்சாயத்தார் மற்றும் நீதிமன்றம் மூலமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி என்னிடமிருந்து விவாகரத்து கேட்டு மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். அதன் பின்னிட்டாவது மனைவியுடன் தான் சேர்ந்து வாழ வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) என் மனைவி, மகன் வேண்டுமென்று சொன்னால் நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு மனு தாக்கல் செய்யாததால் இன்று வரை என் மனைவி, மகனுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என தெரிய வருகிறது என்றால் அவ்வாறு இ ல்லை. நான் சேர்ந்து வாழ விரும்புகிறேன். குழந்தை பிறந்தவுடன் என் மனைவி எடுத்துச் சென்று 7 ஆண்டுகள் ஆன நிலையில் என் மனைவிக்கு வாழ்வாதரத்திற்கு பண செலவு செய்தேனா என்றால் இல்லை. என்னுடைய தொலைபேசி எண்ணை பிளாக் செய்ததால் அவ்வாறு பண உதவி செய்ய இயலவில்லை. என் மகன் எந்த பள்ளியில் படிக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் பேசுவதே இல்லை.

6) கவுன்சிலர் வைத்து பஞ்சாயத்து பேசிய போது என் மகனுக்கு என்ன வயதாகிறது. பள்ளிக்கு செல்கிறாரா இல்லையா என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என் மகன் வயது எனக்கு தெரியும். ஆரம்பத்தில் படித்த பள்ளி தெரியும். தற்போது எங்கு படிக்கிறார் என்று எனக்கு தெரியாது. என் பிரமாண பத்திரிக்கையில் 20வது பத்தியில் சொல்லப்பட்ட விவரம் குறித்து கேட்கப்பட்ட போது மனைவி குழந்தை பிறந்த பின்னிட்டு

என்னை விட்டு பிரிந்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் குழந்தை பிறந்து ஓராண்டு கழித்து பிறந்த நாள் விழா கொண்டாடிய பிறகு 1 மாதம் கழித்து பிரிந்து சென்றுவிட்டார்.

7) நான் பிறந்தநாள் விழாவிற்கு என் மனைவியின் நகையை அடமானம் வைத்து பிறந்த நாள் விழா கொண்டாடினோ என்றால் இல்லை. லாக்டவுன் என்பதால் குடும்ப செலவிற்காக அடமானம் வைத்தேன். அடமானம் வைத்த பணத்தை என் மனைவியே எடுத்து சென்றுவிட்டார். பிரமாண பத்திரிக்கையில் 21வது பத்தியில் உண்மையில் மைனர் குழந்தைக்கு நேரம் நன்றாக இல்லை என்றும் அதனால் தனித்திருக்கலாம் சென்னையில், குமாரபாளையத்தில் வீடு பார்க்க வேண்டுமென்று கூறியது சம்மந்தமாக என்ன சொல்கிறீர் என்றால் முதல் முறை பிரிந்த போது தனிகுடித்தனம் செல்ல வேண்டுமென்று சொன்னதால் நான் சென்னையில் வீடு பார்த்தேன். நான் வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு போன் செய்து மனுதாரரிடம் பேசிய போது வரமுடியாது என்று சொன்னார். மறுபடியும் பஞ்சாயத்து பேசிய போது சென்னைக்கு வரமாட்டேன் என்றும் குமாரபாளையத்தில் பார்க்குமாறு சொன்னார். மீண்டும் கடன் வாங்கி நான் குமாரபாளையத்தில் வீடு பார்த்தேன். வருவதாக கூறிவிட்டு அங்கும் வரவில்லை. ஒரு வருடம் எனக்காக மேட்டூரில் இருக்குமாறு கூறினார். அவ்வாறு இருந்தால் மீண்டும் என் பெற்றோர் வீட்டிற்கு வருவதாக கூறினார்.

8) என் மனைவி எந்த ஆண்டு செல்போன் அழைப்பை பிளாக் செய்தார் என்றால் 2023ம் வருடம் முதலே பிளாக் செய்துவிட்டார்.

தற்போது வாட்ஸ் அப்பில் சேட் செய்த நிலையில்

9) என்ன காரணத்திற்காக நிரூபிக்கும் பொருட்டு பிறந்த நாள் புகைப்படம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் என் அக்கா வரவே இல்லை என்று சொல்வதை முறியடிக்கும் விதமாக தாக்கல் செய்யப்பட்டது. என் இளைய சகோதரி கவிதா பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளவில்லை. இடையில்

எந்த தேதியில் என் அக்கா என் மகனை பார்க்க வந்தார் என்றால் 2020 ம் வருடம் மனுதாரர் வீட்டில் பார்த்தார். என் பதிலுறையிலும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையிலும் குழந்தை பிறந்த பின்னிட்டு எங்கள் குடும்பத்தினரை பார்க்க மனுதாரர் அனுமதிக்கவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது சாட்சியத்தில் என் அக்கா மனுதாரர் வீட்டிற்கு சென்று பார்த்ததாக முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகைப்படம் பிறந்தநாள் விழாவிற்கு முன்பாக எடுக்கப்பட்டது. பிறந்த நாள் விழாவிற்கு பின்னிட்டு தான் பிரச்சனை ஏற்பட்டது.

10) என் மனைவி குழந்தை பிறந்தபின்னிட்டு கோவித்து கொண்ட நிலையில் எத்தனை முறை திரும்ப என் வீட்டிற்கு வந்தார் என்றால் வரவில்லை. பிறந்த நாளுக்கு பின்னிட்டு என் மனைவி என்னுடன் என் வீட்டிற்கு வந்ததாக என் சாட்சியம் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது பொய் என்றால் கோவிலுக்கு செல்வதற்காக வந்தார்.

11) வாட்ஸ் ஆப்பில் உள்ளவற்றை பார்த்து சாட்சி பதில் அளித்துள்ளது குறித்து சொல்லமுடியுமா என்றால் சாட்சி அக்கா விற்கு அனுப்பியதா சொன்னார். எனது அக்காவிற்கு அனுப்பிய செய்தியில் என்ன சொல்லியுள்ளது என்றால் எனது வாழக்கை கெடுத்துவிட்டதாக சொல்லபட்டுள்ளது. வாசகத்தை படித்து காட்டி சாட்சியிடம் கேட்ட போது மனம் சரியில்லா என சொல்லியுள்ளேன். எனது அக்காவிற்கு அனுப்பிய செய்தியை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எனது மனைவியின் அண்ணன் ஊனமுற்றவர் என்றால் சரிதான். நான் குமாரபாளையத்தில் இருந்து எனது மகனை அடித்து இழுத்து வந்தேனா என்றால் இல்லை.

12). நான் அறிவிப்பு அனுப்பியதில் விவகாரத்து கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். என்னுடைய மனைவி மகன் ஆகியோருடன் சேர்ந்து வாழ விருப்பமிருந்தால் விவகாரத்து கேட்டிருக்க மாட்டேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. பதில் தான் சொல்லியுள்ளேன். எனது மனைவி தான் தோன்றிதனமாக வாழ்ந்து வருவதாக சொல்லும் நிலையில் என்னவென்றால் என்னை நல்லவன் என

சொல்லிவிட்டு எனது அண்ணன் பயப்படுவதாக சொல்வது தான் அர்த்தம். நான் வாழ வேண்டினேன் ஆனால் மனுதாரர் வாழ விருப்பமில்லை என்று மக்கள் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளார். நான் பலமுறை மனுதாரரை அடித்து துன்புறுத்திஉள்ளேன் என்றால் சரியல்ல. என்னை அடித்ததால் திருப்பி அடித்தேன்.

13). திருமண புகைபடத்தை நான் நெருப்பு வைத்து எரித்தேன். நல்லபடியாக வாழ வேண்டிய நிலையில் ஏன் எரித்தேன் என்றால் எனது குடும்பத்தை இழிவாக பேசியதால் எரித்தேன். திருமண புகைபடம் அனைவரும் பார்க்கவேண்டுமென்ற நிலையில் நான் மனுதாரர் அவர்களை கொடுமைபடுத்தினேன் என்றால் இல்லை. நான் எனது அப்பா அம்மா கவிதா அனைவரும் சேர்ந்து கொடுமைபடுத்தினோம் என்றால் சரியல்ல.

14). 1 பவுன் நகை மற்றும் இதர நகை அடமானம் வைக்கபட்டது என்றால் அந்த அடமான தொகையினை மனுதாரர் எடுத்து கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு எடுத்து சென்று விட்டார். எனது பெயரில் என்ன காரணத்திற்காக வைத்திருந்தேன் என்றால் எனது மனைவி தான் வைத்து அந்த தொகையினை முழுவதையும் எடுத்து சென்று விட்டார். அம்மா துணி தேய்க்கும் தொழில் மற்றும் அப்பா மருத்துவமனையில் வேலை செய்கிறார். மனுதாரரர் பெற்றோகள் வாடகை வீட்டில் உள்ளார் என்றால் சரிதான். மனுதாரர் அவரது பெற்றோரை நம்பி தான் வாழ்கிறார் என்றால் சரிதான். நான் கணவர் மற்றும் தகப்பன் என்ற முறையில் பாரமரிக்க வேண்டிய கடமை உள்ளது என்றால் சரிதான் .என்னையும் எனது மனைவி பார்த்து கொள்ளும் பொறுப்பில் உள்ளார்.

15). திருமணத்தின் போது மனுதாரர் தான் செலவு செய்தார் என்றால் நாங்கள் தான் முழு செலவும் செய்தோம். எனது மனைவி வீட்டார் தான் முழு செலவு செய்தார் என்றால் இல்லை. நான் மற்றும் எனது பெற்றோர் ஆகியோர் கொடுமைபடுத்தியதால் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர் என்றால் இல்லை. மருத்துவசெலவு அன்றாட செலவு செய்ய கடமைபட்டவர் என்றால் ஆமாம். எனது மனைவிக்கு செய்த மனஉளைச்சலுக்காக இழப்பீடு ரு.5 லட்சம்

கொடுக்கவேண்டுமென்றால் சரியல்ல. நான் என்ன வேலைக்கு செல்கிறேன் என்றால் நான் டையிங் மெசின் ஆப்ரேட்டராக ஒப்பந்த அடிப்படையில் செய்கிறேன். அதன் முலமாக மாதம் ரு.14,000 வருமானம் வருகிறது. எனக்கு மாதம் ரு.30,000 வரை வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பாக மாதம் ரு.30,000 வரை வருமானம் பெற்று வந்தேன். தற்போது உடல் சரியில்லை என்பதால் என்னால் அவ்வாறு வருமானம் ஈட்ட முடியவில்லை. நான் மனுபடி மாத தொகை கொடுக்கவேண்டிய கடமையுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு கொடுக்கலாம் என்றால் மாதம் ரு. 2000 வரை கொடுக்கலாம். மனுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.04.08 17:39:24 +0530

Judicial Magistrate No.II,
Mettur.